கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு
முன்னிலை: D.மோகன்குமார்.,B.Com.,M.L.,
கூடுதல் சார்பு நீதிபதி, திருச்செங்கோடு.
2025–ம் ஆண்டு ஜீன் திங்கள் 04–ம் புதன்கிழமை
IA No.02/2024–ன் OS No.396/2024

T. மணிசங்கர் – மனுதாரர்/வாதி

/எதிர்/

R. கொழந்தவேல் – எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 04–06–2025–ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.வி.மாணிக்கவேலு, அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், மற்றும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

உ த் த ர வு

1) மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். எதிர்மனுதாரர் பிரதிவாதியாவார். மேற்படி வழக்கானது கடன் தொகையை வசூலிக்க வேண்டி கடனுறுதி சீட்டு அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். மேற்படி இந்த மனுவானது தீர்ப்பிற்கு முன்பு ஜப்தி செய்ய வேண்டுமென்பதற்காக உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 38 விதி 5 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரரின் சங்கதிப்படி ரூ.3,50,000/– கடந்த 12.06.2022–ம் தேதியில் பிரதிவாதி பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ரூ.1.50/– வீதம் தருவதாக ஒப்புக்கொண்டு தாவா கடனுறுதி சீட்டை எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், பின்னிட்டு அசலோ, வட்டியோ செலுத்தாமல் காலம் தாழ்த்தி வருவதாகவும், மேற்படி எதிர்மனுதாரர் அவருக்கு பாத்தியப்பட்ட அசையாச்சொத்துக்களை விற்பனை செய்ய முயற்சித்து வருவதாக திருச்செங்கோடு வட்டம், கல்லுபாளையத்தை சேர்ந்த முத்துசாமி மகன் குணசேகரன் என்பவர் மூலம் தெரிய வந்தது. எனவே, தீர்ப்புக்கு முன் மனுச் சொத்தை ஜப்தி செய்யக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இந்த மனுவில் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதனை பெற்றுக்கொண்ட அவர் நீதிமன்றத்தில் ஆஜராகமல் 09.12.2024–ம் தேதி

ஒருதலைபட்சமாகிவிட்டார். பொதுவாக, தீர்ப்புக்கு முன் சொத்தை ஜப்தி செய்து சம்மந்தமாக கீழ்க்கண்ட மாண்பமை உச்சநீதிமன்ற முன் தீர்ப்புரையில் இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது.

08. The Hon'ble Supreme Court of India in Raman Tech. & Process Engg. Co. Vs Solanki Traders reported in 2008 (2) SCC 302 had held as follows;
"5.The power under Order 38 Rule 5 CPC is drastic and extraordinary power. Such power should not be exercised mechanically or merely for the asking. It Should be used sparingly and strictly in accordance with the Rule. The purpose of Order 38 Rule 5 is not to convert an unsecured debt into a secured debt. Any attempt by a plaintiff to utilize the provisions of Order 38 Rule 5 as a leverage for coercing the defendant to settle the suit claim should be discouraged. Instances are not wanting where bloated and doubtful claims are realised by unscrupulous plaintiffs by obtaining orders of attachment before judgment and forcing the defendants for out of court settlement, under threat of attachment."

04) மேற்சொன்ன முன்தீர்ப்பின்படி தாவா தொகைக்கு பிணையம் அளிக்க உத்தரவிடுவதும் மற்றும் தீர்ப்புக்கு முன்பு சொத்துக்களை ஜப்தி செய்வதும் அசாதாரண பரிகாரம் ஆகும். அசாதாரண பரிகாரங்களை வழங்கும்பொழுது நீதிமன்றம் சட்டவிதிகளை கண்டிப்பான முறையில் கடைபிடிக்கவேண்டும். எதிர்மனுதாரர்/பிரதிவாதி மனுச்சொத்துக்களை விற்பனை செய்ய முயற்சி செய்கிறார் என்று மனுவில் சொல்லியுள்ள காரணத்தினாலேயே தீர்ப்புக்கு முன்பு சொத்தினை ஜப்தி செய்ய உத்தரவிட இயலாது.

05) இந்த மனுவில் மனு சொத்து எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதாரமாக மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 ஆக 22.08.2005-ம் தேதியிட்ட மனு சொத்திற்கு எதிர்மனுதாரர்/பிரதிவாதி பெயரில் உள்ள கிரையப்பத்திரம் - நகல், ம.சா.ஆ.2 ஆக 28.10.2024-ம் தேதியிட்ட மனு சொத்திற்கான வில்லங்க சான்றிதழின் கணினி நகல் ஆகியவைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுச்சொத்து எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பது தெரியவருகிறது. மேலும், மனு சொத்தினை மூன்றாம் நபருக்கு விற்பனை செய்ய எதிர்மனுதாரர் முயற்சித்து வருகிறார் என்பதை நிரூபிக்கும் விதமாக ஒரு முத்துசாமியின் மகன் குணசேகரன் என்பவர் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். எனவே, மேற்சொன்ன அவரின் பிரமாண வாக்குமூலத்தின் மூலம் எதிர்மனுதாரர் மனு சொத்தினை மூன்றாம் நபருக்கு விற்பனை செய்ய முயற்சித்து வருகிறார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஆஜராகி மனுதாரரின் சங்கதிகளை மறுத்து எதிர்வியாஜிதம் செய்யவில்லை. மேலும் நீதிமன்ற உத்தரவுப்படி

பிணையப்பத்திரம் தாக்கல் செய்யவும் முன்வரவில்லை. மேற்சொன்ன வகையில் மனுதாரரின் சங்கதி மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

06) அடுத்ததாக, மனுதாரர் இந்த எதிர்மனுதாரர் தீர்ப்பு மனுதாரருக்கு சாதகமாக பிறப்பிக்கப்படும் பட்சத்தில் அதை நிறைவேற்றுகை தடை செய்யும் எண்ணத்துடன் அல்லது கால தாமதப்படுத்தும் எண்ணத்துடன் விற்பனை செய்ய முயற்சித்து வருகிறார் என்ற சங்கதியை உரிய தனி நபர் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார். எனவே இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு பின்னர் 2025–ம் ஆண்டு ஜீன் திங்கள் 04–ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

D MOHANKUMAR
Digitally signed by D MOHANKUMAR
Date: 2025.06.04 17:28:00 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

1) <u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்– இல்லை.</u>

<u>2) மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 22.08.2005–ம் தேதி மனு சொத்திற்கு எதிர்மனுதாரர்/பிரதிவாதி பெயரில் உள்ள கிரையப்பத்திரம் – நகல் |
| ம.சா.ஆ.2 | 28.10.2024–ம் தேதியிட்ட மனு சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் – கணினி நகல் |

3) <u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>– இல்லை.

D MOHANKUMAR
Digitally signed by D MOHANKUMAR
Date: 2025.06.04 17:28:13 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண்.02/2024-ன்
அ.வ.எண்.396/2024
நாள்.04-06-2025.